Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate, Gingee
CC.No. 10 / 2020

PW -1

Name - குழந்தையேசு

Father Name -லூர்துசாமி

Village - கொம்மேடு

Taluk -

Religion -

Age - 70

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14.12.2021

முதல் விசாரணை

நான் கொம்மேடு கிராமத்தில் வசித்து வருகிறேன், நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன், ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், அவர் என் சித்தப்பா மரியான் மகன். கடந்த 10.09.2018 ம் தேதி மதியம் சுமார் 1.00 மணி அளவில் என் நிலத்தில் ஜே.சி.பி வைத்து சுத்தம் செய்துகொண்டியிருந்தேன். ஆஜர் எதிரி என் நிலத்து வழியாக முன்பே அவரது நிலத்திற்கு பைப் போட்டுயிருந்தார். நான் ஜே.சி.பி வைத்து சுத்தம் செய்யும் போது தவறுதலாக அந்த பைப் உடைந்துவிட்டது. அவ்வாறு பைப் உடைந்தது எங்களுக்கு மறுநாள் தெரியவந்தது. நானும் என் மனைவியும் மாடு கட்டி விட்டு கழனிக்கு செல்லும்போது, என் உறவினர் ஜார்ஜ் என்பவர் என்னை கூப்பிட்டு பைப் உடைந்துவிட்டது என்றும், அதை எவ்வாறு சரிசெய்வது என்று என்னிடம் கேட்டார். நான் அவரிடம் தவறுதலாகதான் பைப் உடைந்துவிட்டது என்று பேசிக்கொண்டியிருந்தபோது எங்கிருந்தோ வந்த ஆஜர் எதிரி என் பைப்பை உடைத்ததற்கு நஷ்ட ஈடு கொடு என்று என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி என் மனைவியை தலையில் தாக்கினார். பிறகு ஆஜர் எதிரி என்னை என் மண்டையில் கருங்கல்லால் தாக்கி காயம் ஏற்படுத்தினார். நான் கீழே விழுந்துவிட்டேன். நான் சுதாரித்து எழுவதற்குள் ஆஜர் எதிரி என் மனைவியை அதே கல்லால் தலையில் தாக்கி என் மனைவியை தகாத வார்த்தைகளால் திட்டினார். பின்னர் ஆஜர் எதிரியை என் மனைவியை தடியால் பின் காலிலும், இடுப்பிலும் அடித்தார். ஜார்ஜ் என்பவரும், வளத்தியை சேர்ந்த தயாநிதி என்பவரும், சண்டையை மறித்துவிட்டார்கள். பிறகு அங்கிருந்து சென்ற ஆஜர் எதிரி பெரிய

தடியை எடுத்து வந்து மீண்டும் என் மனைவியை தாக்கினான். பின்னர் அடிப்பட்ட எங்களை என் மகள் ஜேஸ்வினும், தங்கை யாகுளமேரி என்பவரும் எங்களை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர், மேல் சிகிச்சைகக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலிசார் என்னை மருத்துவமணையில் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டடப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா 1 ஆகும். விசாரித்தனர். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.

Taken down before/me in Open
Court and read over/interpreted to
the witness and acknowledged by
him/her to be correct.
Judicial Magistrate, Gingee.